# (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**ஓ.எஸ்.எண். 39/2025** **நாள்.25.02.2026**

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25 நாள் வாதி தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தமிழ்செல்வன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | முனுசாமி | சாதி | |
| கிராமம் | அகலூர் | மதம் | இந்து |
| வட்டம் | செஞ்சி | வயது | 32 |

**வா.சா.1**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் 1-ம் சாட்சி ஆவேன். நான் **வா.சா.1 ஆக** இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

1. வா.த.சா.ஆ.1- 20.03.2022 தேதியிட்ட புரோநோட் அசல்

2. வா.த.சா.ஆ.2- 23.03.2024 தேதியிட்ட சட்ட அறிவிப்பு அலுவலக நகல்

3. வா.த.சா.ஆ.3- 29.03.2024 தேதியிட்ட அஞ்சல் சார்வு அறிக்கை பதிவிறக்க நகல்.

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**